**செ.வெ.எண்: 57** **நாள்:25.10.2016**

## தமிழ்நாடு அரசு, தமிழ்வளர்ச்சித் துறை-2016-2017ஆம் ஆண்டிற்கான பள்ளி போட்டிகள் நடத்துதல்:-

# பத்திரிகைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்ட அளவில் **02.11.2016அன்று மேனிலைப்பள்ளியில் பயிலும் 11,12ஆம் வகுப்பு** இருபால் மாணவர்கட்கும் **கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள்** நடைபெறவுள்ளன.

கொடுக்கப்பெறுகின்ற தலைப்புகளில் (கவிதை/கட்டுரை/பேச்சு) போட்டிகள் பிறமொழிச் சொற்கள் இடம்பெறாதிருத்தல், தமிழ் இலக்கிய மொழியமைவுகள் பிறழாமலிருத்தல், தமிழ்மொழியின் சிறப்பினை எடுத்துரைப்பனவாக இருத்தல் இப்போட்டிகளின் தனித்தன்மை என்பது குறிப்பிடத் தக்கது.

புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி வளாகக் கூட்ட அரங்கில் இப்போட்டிகள் நடைபெறும். மாணவரின் மொழி மற்றும் படைப்பாற்றலை வளமைப்படுத்துவதற்காக நடத்தபெறும் இப்போட்டிகளில் (ஒவ்வொரு போட்டியிலும்) வெற்றிபெறும் **முதலிட மாணவருக்கு தலா உரூ. 10,000/- (உரூபாய் பத்தாயிரம் மட்டும்) இரண்டாமிட மாணவருக்கு தலா உரூ. 7,000/- (உருபாய் ஏழாயிரம் மட்டும்) மூன்றாமிட மாணவருக்கு தலா உரூ.5,000/- (உருபாய் ஐந்தாயிரம் மட்டும்)** என மூன்று போட்டிகளுக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்பெறும். நடுவர்கள் மற்றும் நெறியாளர்களின் முடிவுப்படி தெரிவு செய்து அறிவிக்கப்பெற்ற மாணவருக்கு பரிசுத் தொகை ரொக்கமாக வழங்கி சிறப்பிக்கப்பெறுவர்.

மேலும், இதுகுறித்த அழைப்புக் கடிதம் போட்டியில் கலந்துகொள்வதற்கான படிவங்களுடன் இணைத்து புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் வாயிலாக அவ்வலுவலகக் கட்டுப்பாட்டில் இயங்கும் (புதுக்கோட்டை கல்வி மாவட்டம் மற்றும் அறந்தாங்கி கல்வி மாவட்டம்) மேனிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட மேனிலைப் பள்ளி மாணவர்களுக்கான போட்டி நடக்கும் நாள் **02.11.2016அன்றும் புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி வளாகக் கூட்ட அரங்கிற்கு முற்பகல் 9.00 மணிக்குள்** போட்டிகளை நிகழ்த்தும் நடுவர் மற்றும் நெறியாளர்களிடம் மாணவர்களுக்கு அளிக்கப்பெற்றுள்ள ஆளறியும் மற்றும் பரிந்துரைச் சான்றினை வழங்கி மாணவர் பெயர் மற்றும் பள்ளி முகவரிகளை பதிவு செய்த பிறகு போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பெறுவர். பள்ளித் தலைமையாசிரியர்கள் இதில் சுணக்கம் ஏதும் இல்லாமல் முனைப்புடன் செயல்பட அன்புடன் தெரிவிக்கப்பெறுகிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**